ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



## ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தி சிறப்பிதழ்


| வேணு : 8 | டிசம்பர் - 2002 | கானம் : 5 |
| --- | --- | --- |


www.madhuramurali.org

ஸ்ரீ ஹரி

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தி மஹோத்ஸவம்



சென்னை ப்ரேமிகபவனத்தில்
ப்ரஹ்மஸ்ரீ மணித்ராவிட்
சாஸ்திரிகளின்
வேதாந்த உபன்யாஸம்
*(21.10.2002 - 25.10.2002)*

மதுரபுரி ஆசிரமத்தில்
வாக்யார்த்த ஸதஸ்
*(1.11.2002 - 3.11.2002)*





ஸ்ரீ ஸ்வாமிகளின்
ஜயந்தி
*(4.11.2002)*

கலைமாமணி
சௌ. ஹேமலதா ஸ்ரீபால்
அவர்களின் பரதநாட்டியம்
*(4.11.2002)*



ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தி மஹோத்ஸவம்



சிட்னி, ஆஸ்திரேலியாவில்
நாமஸங்கீர்த்தனம்
(4.11.2002)



சிட்னி, ஆஸ்திரேலியாவில்
ஜயந்தி மஹோத்ஸவம்
(4.11.2002)



மல்லேச்வரம்
பெங்களூர்
(4.11.2002)



சென்னை
ஆலப்பாக்கம்
மதுரமுரளிபவனம்
(4.11.2002)

# மதுரமுரளி

Registered as Newspaper in India R. No. 62828 / 95

| | | |
|---|---|---|
| Regd. No. TN / Chief PMG / 156 / 2002 | | Licensed to Post without prepayment WPP No. 52 / 2002 |
| வேணு : 8 | டிசம்பர் - 2002 | கானம் : 5 |




சென்னை ப்ரேமிகபவனத்தில் துளசி கல்யாணம்


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083 and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. ☎: 8522656 / 8524256. Editor : S. Sridhar.

visit us at www.madhuramurali.org ; e-mail : contact@madhuramurali.org

ஸ்ரீ ஹரி:

## பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

வேணு : 8 டிசம்பர் 2002 கானம் : 5

## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 85 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 6 |
| 4. | வேத கதைகள் - 66 | 8 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 56 | 10 |
| 6. | ஸனாதனப் புதிர் - பகுதி - 20 | 13 |
| 7. | பாலகர்களுக்கு ஒரு கதை - 60 | 15 |
| 8. | மாலே மணிவண்ணா - 3 | 18 |
| 9. | ப்ருந்தாவனமும், நந்தகுமாரனும் - 11 | 22 |
| 10. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 87 | 27 |


दुर्लभोमानुषो देहो देहिनां क्षणभङ्गुरः ।
तत्रापि दुर्लभं मन्ये वैकुण्ठप्रियदर्शनम् ॥

ஒரு கணத்தில் முடிவடையகூடியதாயிருந்தாலும் மனிதப்பிறவி என்பது கிடைப்பது அரிது! அந்த மனிதபிறவியிலும், விஷ்ணு பக்தர்களை தரிசிப்பது என்பது மிகவும் அரிது!!

**11 - 2 - 29 - ஸ்ரீமத்பாகவதம்**

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : முகாரி தாளம் : ஆதி

*பல்லவி*

***ராதே த்வம் மம ஸ்வாமினி - நநு***
***ரஸிகேஶமபி ந கணயாமி (ராதே)***

*சரணங்கள்*

***அந்ருதம் கதாபி த்வம் ந ஹி வதஸி***
***அஸூயானபி த்வம் நைவ ஸம்ஹரஸி (ராதே)***

***கபடவசனை: ந த்வம் சலயஸி***
***கோபீஜார இவ மாம் ந த்யஜஸி (ராதே)***

***வஞ்சிதாஸ்யஹமிவ ஹரிணா த்வமபி***
***கதிராவயோ: முரளீதரஸ்ததாபி (ராதே)***

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தி தினத்தன்று உலகெங்கிலும் பல பக்தர்கள் தொலைபேசி மூலமாகவும், கடிதம் மூலமாகவும் தொடர்பு கொண்டு தங்கள் நமஸ்காரங்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்தனர். பல்வேறு கோயில்களில் விசேஷ பூஜைகள் நடத்தப்பட்டு, ப்ரஸாதம் கிடைக்கப் பெற்றது. மேலும், பலர் அவரவர்களுடைய இல்லங்களிலும் ஸங்கமாகவும் ஸ்வாமிகளின் ஜயந்தியை கொண்டாடி உள்ளனர். மதுரமுரளியின் மூலமாக பக்தர்கள் அனைவருக்கும் மிஷனின் சார்பில் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறோம். அனைவருக்கும் பகவானின் அனுக்ரஹம் கிடைப்பதற்கு ப்ரார்த்திப்பதாக ஸ்ரீ ஸ்வாமிகள் தெரிவிக்கச் சொன்னதையும் இதன்மூலம் பக்தர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறோம். **- ஆசிரியர்**

85

வேதபாடசாலைகள் நடத்துவது, வேதம், சாஸ்திரம் படித்த வித்வான்களை கௌரவிப்பது, நலிவடைந்த கோவில்களை சீரமைத்து திருப்பணி செய்வது, மஹாமந்திரமான ‘ஹரே ராம…’ மந்திரத்தை பிரச்சாரம் செய்வது போன்றவைகளைத்தான் ஸ்ரீ ஸ்வாமிகள் தம்முடைய வாழ்க்கையின் முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளார்கள். அது போலவே, நம் ஸ்வாமிகளின் முயற்சியால் பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டு செவ்வனே நடந்து வருகின்றன. குறுகிய காலத்திற்குள் பல கோவில்கள் சீரமைக்கப்பட்டு ஸம்ப்ரோக்ஷணம் செய்யப்பட்டுள்ளது. அதுபோலவே, நம்முடைய ஸத்ஸங்கத்தின் அன்பர்களின் துணைகொண்டு பல நகரங்களிலும், கிராமங்களிலும் நாமபிரச்சாரம் செய்யப்பட்டு வருகின்றது.

பல தொலைக்காட்சி ஸ்தாபனங்கள் முதலில் ஸ்வாமிகளை அணுகி ஏதாவது நல்ல விஷயங்களை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று வேண்டியபொழுது முதலில் எல்லாம் மறுத்து வந்த போதிலும், நவீன சரணங்கள் சாதனங்களை எல்லாம் நாம் நம்முடைய நல்ல செய்திகளின் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளாமல் இருப்பது மிகப்பெரிய தவறு என்று தோன்றியதால், கடந்த நான்கு மாத காலமாக காலையில் நம் ஸ்வாமிகள் தினமும் தொலைக்காட்சி மூலமாக நல்ல விஷயங்களை மிகவும் எளிமையாக, நல்ல தமிழில் எல்லோருக்கும் புரியும்படி எடுத்துச் சொல்லி வருகின்றார்கள்.

ஒவ்வொரு நாளும் உபந்யாசத்தை ஆரம்பிக்கும் முன்பு மூன்று தடவை மஹாமந்திரமான ‘ஹரே ராம…’ மந்திரத்தைச் சொல்லிய பிறகுதான் உபந்யாசத்தை ஆரம்பிக்கின்றார்கள். இதில் நம் ஸ்வாமிகளுக்கு என்ன சந்தோஷம் என்றால் இந்த மஹாமந்திரம் வெளிநாடு முதல் இந்தியாவில் உள்ள குக்கிராமம் வரையில் காலையில் எல்லோருடைய காதிலும் விழுகின்றதே என்பதுதான்.

நல்ல விஷயங்களை எடுத்துச் சொன்னால் இன்றும் மக்கள் கேட்பதற்குத் தயாராகத்தான் இருக்கின்றார்கள். தியாக மனப்பான்மையுடன் சொல்பவர்கள்தான் குறைவு.

நம் ஸ்வாமிகளுடைய ஜன்ம நக்ஷத்திரம் ஐப்பசி ஸ்வாதி, நவம்பர் மாதம் நான்காம் தேதி தீபாவளி அன்று கொண்டாடப்பட்டது. இதன் ஒரு அங்கமாக ப்ரஹ்மஸ்ரீ மணிதிராவிட் சாஸ்திரிகள் அவர்கள் சென்னை ப்ரேமிகபவனத்தில் அக்டோபர் 21-ந் தேதி முதல் 25-ந் தேதி வரை வேதாந்த ச்ரவண அதிகாரி, ப்ரஹ்ம-ஆத்மவிசார ப்ரயோஜனம், உபநிஷத் ஆத்ம நிரூபணம், ச்ரௌத தாத்பர்ய நிர்ணயம், மோக்ஷ ஸ்வரூப ப்ரதர்ஶணம் என்ற தலைப்புகளில் மிகவும் அழகாக உபந்யாசம் செய்தார்கள். காஞ்சி மஹாபெரியவாள் ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளால் வகுக்கப்பட்ட ஒரு Scheme-படி பன்னிரண்டு சாஸ்திர பரீக்ஷைகளிலும் தேர்ச்சி பெற்ற ஒரேயொரு வித்வான் ஸ்ரீ மணித்ராவிட் சாஸ்திரிகள் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, உபந்யாஸ பூர்த்தி தினத்தன்று ப்ரேமிக பவனத்தில், அவருக்கு 1 லட்சம் ரூபாய் ஸம்பாவனை வழங்கி விசேஷமாக கௌரவிக்கப்பட்டது.

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜன்ம நக்ஷத்திரத்தை ஒட்டி மதுரபுரி ஆசிரமத்தில் ஒரு வித்வத் ஸதஸ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் இந்தியாவின் பல பாகங்களில் இருந்து முப்பத்தியிரண்டு வித்வான்கள் கலந்து கொண்டு மீமாம்ஸை, வ்யாகரணம், வேதாந்தம், தர்க்கம் போன்ற பல சாஸ்திரங்களில் வாக்யார்த்தம் செய்தார்கள். நவம்பர் ஒன்று முதல் மூன்றாம் தேதி வரை இந்த வித்வத் ஸதஸ் நடைபெற்றது. நவம்பர் மூன்றாம் தேதி அன்று வித்வான்கள் எல்லோரும் கௌரவிக்கப்பட்டார்கள்.

நவம்பர் 4-ந் தேதி அன்று, சென்னை தியாகராய நகர், பாண்டிபஜாரை ஒட்டியுள்ள சிங்காரவேலு தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ புவனேஸ்வரி கல்யாண மண்டபத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜன்ம நக்ஷத்திர வைபவம் நடைபெற்றது. இந்த கல்யாண மண்டபத்தின் உரிமையாளர் திரு. ரவி அவர்கள் நம் ஸ்வாமிகளிடம் மிகவும் ஈடுபாடு உடையவர். காலையில் ப்ரஹ்மஸ்ரீ மல்லிகார்ஜுன

ஸோமயாஜி தலைமையில் பல வேதவித்வான்கள் கணபதி ஹோமத்துடன் ஆரம்பித்து பல ஹோமங்கள் செய்தார்கள். அதைத் தொடர்ந்து ஸ்ரீ ஸ்ரீபால் – டாக்டர் கமலிஸ்ரீபால் தம்பதியினரின் குமாரி, கலைமாமணி சௌ. ஹேமலதா அவர்களின் பரதநாட்டியம் நடைபெற்றது. சௌ. ஹேமலதா அவர்கள் மிகவும் அற்புதமாக நடனமாடி எல்லோரையும் ஆனந்தத்தில் ஆழ்த்தினார். அவரது தாயார் டாக்டர் கமலிஸ்ரீபால் அவர்கள் மருத்துவதுறையில் மட்டும் அல்லாமல் எழுத்துப் பணியிலும் தன் முத்திரையைப் பதித்தவர். இவர் ‘‘கோகுலம் கதிர்’’ பத்திரிகையின் ஆசிரியர் ஆவார்.

தொடர்ந்து ஸ்ரீவாஞ்சியம் முரளீதர பாகவதர் அவர்களால் நாமஸங்கீர்த்தனம் நடைபெற்றது. அன்று மதியம் பச்சையப்பன் கல்லூரியில் இளங்கலைப் பட்டப்படிப்பு படித்து வரும் திரு. கலைச்செழியன் தன்னுடைய அஸாதாரணமான ஆற்றலால் அஷ்டாவதானம் செய்து எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தினார். அஷ்டாவதானம் என்று பெயர்தானே ஒழிய அவர் செய்தது பலஅவதானம். மாலையில் ஸ்ரீ கதரி கோபால்நாத் அவர்களின் Saxophone கச்சேரி நடைபெற்றது. ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜன்ம நக்ஷத்திரத்திற்கு பல ஊர்களில் இருந்தும் அன்பர்கள் வந்து கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

நவம்பர் 5-ந் தேதி முதல் 9-ந் தேதி வரை நமது ஸாந்தீபனி குருகுல வித்யார்த்திகள் - தத்வமஸி, புவனசுந்தர், வெங்கட்ராமன், ஹரி, சூர்யநாராயணன், பவன்குமார், ராகவேந்திர சர்மா, சிவராமன், நாராயணன் ஆகியோர் பாடசாலை அத்யாபகர் ஸ்ரீ மல்லிகார்ஜுன ஸோமயாஜியுடன் காஞ்சி காமகோடி மடத்தில் ஸ்ரீ மஹாபெரியவாள் அதிஷ்டானத்தில் யஜுர்வேத பத பாராயணம் செய்தனர். பூர்த்தி தினத்தன்று காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் வித்யார்த்திகளுக்கு தங்க நாணயம் கொடுத்து ஆசி வழங்கினார்.

(தொடரும்)

— ஜயந்தி ஜானகிராமன்

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : பல மஹான்களுடைய சரித்திரங்களைப் படித்துப் பார்க்கும்பொழுது அவர்கள் பகவத் அனுபவத்திற்கு முன்பாகக் கூட அப்படி ஒன்றும் ஆசார அனுஷ்டானங்களை எல்லாம் கடைப்பிடித்து வாழ்ந்ததாகத் தெரியவில்லை. அப்படியிருக்கும்பொழுது நாம் ஏன் இவற்றையெல்லாம் கடைப்பிடிக்க வேண்டும் என்று எனக்கு தோன்றுகின்றது. மேலும், பகவத் அனுபவத்திற்கும் இவற்றிற்கும் எந்தத் தொடர்பும் இல்லையோ என்றும் தோன்றுகின்றது.*

ஸ்ரீ ஸ்வாமிகள் : நீங்கள் சொல்வது உண்மைதான். அத்தகைய மஹான்கள், முற்பிறவிகளில் செய்த சாதனைகள், விட்டகுறை தொட்டகுறையாக இப்பிறவியில் தொடர்வதால் மற்றவர்களைப் போல் கடுமையான ஆசார அனுஷ்டானங்கள் அவர்களுக்குத் தேவையில்லை. ஆசார அனுஷ்டானங்களுடன் இருந்து சாதனைகள் செய்வதற்கும், ஆசாரங்களை அனுஷ்டிக்காமல் சாதனைகள் செய்வதற்கும் வித்யாசம் இருக்கின்றது. ஆசாரத்துடன் சாதனைகள் செய்பவர்களுக்கு சத்யத்தின் தரிசனம் சீக்கிரத்தில் ஏற்படும்.

*கேள்வி : நான் குருவிடம் உபதேசம் பெற்று தினமும் தியானம் செய்து வருகின்றேன். சமீபத்தில் அலுவல் நிமித்தமாக வெளியூர் சென்றிருந்தேன். அப்பொழுது ஒரு லாட்ஜில் வாடகைக்கு அறை எடுத்துத் தங்கினேன். அந்த அறையில் நுழைந்தவுடன் திடீரென்று எனக்கு எப்பொழுதும் இல்லாத அளவிற்கு காமசிந்தனைகள் எழுந்தன. இதற்கு என்ன காரணம்?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : பொதுவாகவே, ஒவ்வொரு இடத்திலுள்ள Cosmic-கும் அங்கு தங்கியிருப்பவர்களின் எண்ண அலைகளால் பாதிக்கப்படுகிறது. ஒருவேளை நீங்கள் தங்கியிருந்த காட்டேஜில் உங்களுக்கு முன்பாக ஒரு இளம் தம்பதியினர் தங்கியிருக்கக்கூடும். எனவே அந்த அறை முழுவதும் மேலோங்கியிருந்த அவர்களது எண்ண அலைகளானது உங்கள் மனதிலும் காம சிந்தனைகளை

தூண்டியிருக்கலாம். ஆகவே, தியானம் செய்பவர்கள் தாங்கள் வெளியூர் செல்ல நேர்ந்தால் முடிந்தவரையில் இது போன்ற காட்டேஜ், லாட்ஜ் இவற்றில் எல்லாம் தங்காமல் ஆசிரமம் மற்றும் ஸாதுக்கள் இருக்கக்கூடிய இடம் போன்றவற்றிலேயே தங்கவேண்டும்.

***கேள்வி : ஹோமங்கள் செய்யும்பொழுது, ஒவ்வொரு மந்திரத்தையும் சொல்லி முடிவிலே ''ஸ்வாஹா'' என்று சொல்லி அக்னியில் பொருள்களை போடுவதைப் பார்க்கின்றோம். ''ஸ்வாஹா'' என்றால் என்ன பொருள்?***

ஸ்ரீ ஸ்வாமிகள் : ''ஸ்வாஹா'' என்பது அக்னிதேவனுடைய மனைவியினுடைய பெயர். ஒரு பொருளை குறிப்பதற்காக நாம் ஒரு சொல்லை பயன்படுத்துகின்றோம் அல்லவா. அந்த சொல்லும், அதன் பொருளும் எப்படி பிரிக்கமுடியாதவையாக இருக்கின்றனவோ அதுபோலவே அக்னிதேவனும் அக்னிதேவனுடைய மனைவியும் பிரிக்கமுடியாதவர்களாக இருக்கின்றார்கள். அக்னிதேவனுடைய மனைவியினுடைய பெயரைச் சொல்லிச் சொல்லிதான் ஹோமம் செய்கின்றோம்.

***கேள்வி : ஒரு மஹாத்மாவைச் சுற்றி இருப்பவர்கள் எல்லோரும் அவரை அநேகமாக புரிந்துகொள்வதில்லை. ஆனால், எங்கேயோ இருப்பவர்கள்கூட அவரை வந்து அணுகி அவருடைய அருளைப் பெற்றுச் செல்கின்றனரே?***

ஸ்ரீ ஸ்வாமிகள் : ஒரு குளத்தில் எவ்வளவோ தாமரைப்பூக்கள் பூத்திருக்கும். பூத்திருக்கக்கூடிய அந்த தாமரைப் பூக்களில் உயர்ந்த தேன் இருக்கும். அந்தத் தேனை அதே குளத்தில் உள்ள மற்ற பூச்சிகளோ, தவளைகளோ உணர்ந்து பருகுவதில்லை. ஆனால் எங்கிருந்தோ வரும் தேனீக்கள் அந்தப் பூக்களில் அமர்ந்து அந்தத் தேனை சுவைத்துச் செல்கின்றன அல்லவா! அதுபோல் தான் இதுவும். அருகாமையில் இருப்பதினால் அவற்றினுடைய அருமை பெருமைகளையெல்லாம் ஒருவரால் உணரமுடியும் என்ற அவசியம் இல்லை. அதை உணரக்கூடிய சக்தி உள்ளவர்களால்தான் உணரமுடியும்.

# வேத கதைகள் - 66

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## ஸாம மஹிமை

தேவர்கள் அரக்கர்கள் இருவர்களும் ப்ரஜாபதியின் பிள்ளைகள். இவர்களில் அரக்கர்கள் அதிக பலம் உள்ளவர்கள். எண்ணிக்கைகளிலும் அதிகமானவர்கள். தேவர்கள் வலிமை அற்றவர்கள். எண்ணிக்கையிலும் குறைந்தவர்கள். இதைப் பின்பற்றிதான் 66 கோடி அரக்கர்கள் 33 கோடி தேவர்கள் என்று புராணங்களிலும் கூறப்பட்டிருக்கிறது. பாகவதத்தில் பாற்கடலைக் கடையும்பொழுது 96 கோடி நபர்கள் பாற்கடலைக் கடைந்தார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

வலிமையற்ற தேவர்கள் தங்கள் தகப்பனாரான ப்ரஜாபதியை அணுகி வலிமை வேண்டி சரணடைந்தனர். ''ஓ தந்தையே! நாங்கள் யாகம் செய்யும்பொழுது நாங்கள் எண்ணிக்கையில் குறைவாகவும் வலிமையற்று இருப்பதாலும் அரக்கர்கள் எங்கள் யாகத்தைக் கெடுத்து விடுகிறார்கள். ஆதலால், எங்களால் ஒழுங்காக யக்ஞம் செய்ய முடியவில்லை. எங்களுக்கு அருள்புரிய வேண்டும்'' என்று வேண்டினர். அப்போது ப்ரஜாபதியானவர் அனிருத்தம் என்ற ஸாமாவைக் கண்டுபிடித்தார். இந்த ஸாமாவிற்கு தேவதை யார் என்று கண்டுபிடிக்க முடியாததால் இந்த ஸாமாவிற்கு அனிருத்தம் என்ற பெயர் ஏற்பட்டது.

இது இப்படிப்பட்டதுதான் என்று சொல்ல முடியாததற்கு அனிருத்தம் என்ற பெயர். ப்ரஜாபதியும் இப்படிப்பட்டவர் என்று சொல்ல முடியாததால் அவருக்கு அனிருத்தர் என்று பெயர் ஏற்பட்டது. அனிருத்த: ப்ரஜாபதி: என்று யஜுர் வேதத்தில் கூறப்பட்டிருக்கிறது. இவ்விதம் அனிருத்தரான ப்ரஜாபதி அனிருத்தம் என்ற ஸாமாவைக் கண்டுபிடித்து தேவர்களுக்கு அளித்தார். இந்த அனிருத்த ஸாமாவில் கடைசியான ஸ்தோத்திரத்தில் ''தேவோவோ த்ரவினோதா:'' என்று வருகிறது. ப்ரஜாபதியினால் அருளிச் செய்யப்பட்ட இந்த அனிருத்த ஸாமாவை கானம் செய்ததால் தேவர்கள் வலிமை பெற்றார்கள். வெற்றியும் அடைந்தார்கள்.

ஒரு சமயம் இந்திரன் ஸன்யாசிகளைத் துண்டு துண்டாக வெட்டி செந்நாய்களுக்கு உணவாக அளித்தான். துறவிகள் எப்பொழுதும் வேதாந்தங்களை படித்துக்கொண்டே இருக்க வேண்டும். சில துறவிகள் இவ்விதம் வேதாந்த அப்யாசம் செய்யாமல் இருந்தனர். இந்தத் துறவிகள் தங்கள் கடமையை ஒழுங்காகச் செய்யாததால் அவர்களை இந்திரன் வெட்டினான். இந்திரன் தன் கடமையைச் செய்தான். கடமையைச் செய்யாதவர்களைத் தண்டிக்க வேண்டியது அரசன் பொறுப்பு. பதினான்கு உலகங்களுக்கும் இந்திரன் அரசன் ஆனதால் தத்வ விசாரம் செய்யாத துறவிகளை வெட்டினான்.

இந்திரன் ப்ரஜாபதியினிடம் வேதாந்தம் படித்து நல்ல ஞானத்தைப் பெற்றவன். ஞானமாகிற அக்னி ஆனது எல்லா பாவங்களையும் அழித்துவிடுகிறது. ஆதலால் கடமைக்காக துறவிகளை வெட்டியதால் ஞானத்தின் பெருமையால் பாபங்கள் அவனை அணுகவில்லை. ஆனாலும், துறவிகளைக் கொன்றவன் என்று உலகமானது அவனை நிந்தனை செய்தது. உலக நிந்தனையால் வாடின இந்திரன் ப்ரஜாபதியை அணுகி நிந்தை விலக வேண்டினான். அப்பொழுது அவர் உபஹவ்யம் என்ற ஸாமாவை கண்டுபிடித்தார். அதை இந்திரனுக்கு உபதேசித்தார். இந்திரன் இதை பாராயணம் செய்ததால் உலக நிந்தையிலிருந்து விடுபட்டான்.

அனிருத்த ஸாமாவை நாமும் பாராயணம் செய்தால் வலிமை அடைந்து வெற்றி பெறலாம். உபஹவ்ய ஸாமாவை பாராயணம் செய்தால் உலக நிந்தையிலிருந்து விடுபடலாம் என்ற உண்மை இதிலிருந்து நன்கு புலப்படுகிறது. இந்த விபரங்கள் ஸாமவேதத்தின் எட்டு ப்ராம்மணங்களுக்குள் தாண்ட்ய ப்ராம்மணத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இவ்விதம் ஆயிரக்கணக்கான விஷயங்கள் அஷ்ட ப்ராம்மணங்களிலிருந்து அறியமுடியும்.

**பிழைதிருத்தம் - நவம்பர் 2002 - மதுரமுரளி**

| | பிழை | திருத்தம் |
|---|---|---|
| பக்கம் 1 | भूभर्व | भूर्भुव |
| பக்கம் 2 | ஸாமா | ஆனந்தபைரவி |

# எந்தரோ மஹானுபாவுலு - 56

நிமாயி, நிதாயி சகோதரர்களின் அபாரமான காரணமில்லாக் கிருபையால் ஜகாயி, மதாயி சகோதரர்களிடம் எப்படிப்பட்ட வியக்கத்தகு மாறுதலை ஏற்படுத்தியது என்று பார்ப்போம். இரு முரட்டு சகோதரர்களும் தங்களது குடும்ப பரிவாரங்களைத் துறந்து ஸதா ஸ்ரீவாஸ் பண்டிதரின் க்ருஹத்தில் அமர்ந்துகொண்டு ஸ்ரீகிருஷ்ண கீர்த்தனமும் பகவந்நாமஸங்கீர்த்தனமும் செய்து வரலானார்கள். காலையில் தினமும் நான்கு மணிக்கு எழுந்து கங்காஸ்னானம் செய்துவிட்டு நியமத்துடன் தினமும் இரண்டு லக்ஷம் ஹரிநாமம் ஜபம் செய்வார்கள். கண்களில் இருவருக்கும் எந்நேரமும் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடும். தங்களது பழைய வாழ்க்கையை நினைத்து நினைத்து வெட்கித்து வருந்துவார்கள். அன்னபானத்தை விஷம்போல் வெறுத்தனர். யாருடனும் பேசுவதையும் அறவே தவிர்த்தனர். இரவு பகலாக அழுது கொண்டே ஜபம் செய்வார்கள்.

ஸ்ரீவாஸ் பண்டிதர் எத்தனை வற்புறுத்தினாலும் அவர்களுக்கு அன்னம் தொண்டையில் இறங்க மறுத்தது. நித்யானந்தரும் எவ்வளவோ சொல்லிப்பார்த்தார். ஆனால், இருவரும் உணவு உண்ண மறுத்தனர். கடைசியில் நித்யானந்தர் ப்ரபுவை வரவழைத்தார். ப்ரபு தனது கோமளமான கரத்தினால் இருவரது முதுகைத் தடவிக்கொண்டே, ''சகோதரர்களே! உங்களுடைய பாபங்களை எல்லாம் நான் எடுத்துக்கொண்டு விட்டேன். நீங்கள் நிஷ்பாபிகளாக இருந்தும் ஏன் போஜனம் செய்யாமல் இருக்கிறீர்கள்! உண்மையில் நீங்கள் உங்கள் பாபங்களை என்னிடம் அளிக்கவில்லையா? இல்லையேல் உங்களுக்கு என் மீது நம்பிக்கைதான் இல்லையா?'' என்று கேட்டார்.

இரு சகோதரர்களும் தீனமாக கைகளைக் கூப்பிக்கொண்டு ''ப்ரபோ! எங்களுக்கு உங்கள் மீது பூர்ணவிச்வாசம் உள்ளது. நாங்கள் எங்கள் பாபத்திற்காக அழவில்லை. எங்கள் பாபத்திற்கான பலனை அனுபவிக்கவேண்டும் என்றால் கூட நாங்கள் ஆனந்தப்படுவோமே! ஆனால், எங்களுக்கு உங்களது

காரணமில்லாத கருணையை நினைத்து நினைத்துதான் அழுகை வருகிறது. எங்களைப் போன்ற பதிதர்களிடமும் நீசர்களிடமும் நீங்கள் காட்டும் பரிவும் அன்பும்தான் எங்களுக்குத் தாங்க முடியாத கண்ணீரை வரவழைக்கிறது. எங்களால் கட்டுப்படுத்திக்கொள்ளவே முடியவில்லை'' என்றதும் ப்ரபு அவர்களை பலவிதமாக சமாதானம் செய்தார்.

ஜகாயி கூட சிறிது சமாதானம் அடைந்தான். ஆனால் மதாயிக்கு பச்சாதாபம் குறையவே இல்லை. ''ஐயோ! நான் எப்படி ஒரு மஹாபுருஷருக்கு தீங்கு இழைத்தேன்! பகவானின் சுதர்சனசக்ரம் என் தலையை சீவி இருக்கக்கூடாதா! அப்படியும் நித்யானந்தர் ப்ரபுவிடம் எனது நன்மையை வேண்டி ப்ரார்த்தனை செய்து கொண்டாரே! என்று நினைத்து நினைத்து வருந்தினான். ஒரு நாள் அவன் நித்யானந்தரின் சரணங்களைப் பிடித்துக்கொண்டு அழுது கொண்டே, ''ப்ரபோ! உங்களுக்கு நான் இழைத்த தீங்கை நினைத்து நினைத்து எனக்கு துக்கம் தாளவில்லை! நான் எத்தனை மறக்க நினைத்தாலும் மிகவேகத்துடன் அதே நினைவு வருகிறது. நீங்கள்தான் ஒரு உபாயம் சொல்லி எனக்கு சாந்தியை அளிக்க வேண்டும்'' என்று கெஞ்சினான்.

நித்யானந்தர், ''சகோதரனே! எனக்கு சத்தியமாக உன்னிடம் எந்தவிதமான வருத்தமும் இல்லை. உனக்கு மனதில் துக்கம் இன்னும் இருந்தால் நீ தவம் செய். தவத்தினால் எல்லாவித துக்கமும் மறையும். தவத்தினால்தான் துக்கம், பயம், சோகம் எல்லாம் விலகும். கங்கைக்கரையில் ஒரு துறை ஏற்படுத்து. அங்கு வந்து ஸ்னானம் செய்யும் ஸ்த்ரீகளும் புருஷர்களும் உன்னை ஆசீர்வாதம் செய்வார்கள். நீயும் அங்கேயே வசித்து அபிமானமின்றி வினயத்துடன் தவம் செய்'' என்றார்.

அவரது ஆணைப்படி, மதாயி தன் கைகளாலேயே கங்காநதி தீரத்தில் ஒரு அழகான படித்துறை ஏற்படுத்தினான். அதில் ஒரு குடிசை செய்துகொண்டு வசிக்கலானான். அந்த கட்டத்தில் ஸ்னானம் செய்ய வரும் ஸ்த்ரீ, புருஷர், குழந்தைகள், வயோதிகர்கள், பண்டிதர், மூர்க்கர் அனைவரது சரணங்களையும் பிடித்துக்கொண்டு தனது தவறுகளுக்கு மன்னிப்புக்கேட்பான். அழுதுகொண்டே, ''தெரிந்தோ தெரியாமலோ உங்களுக்கு நான் என்ன தவறு

இழைத்திருந்தாலும் அவற்றை மன்னித்து அருளுமாறு உங்கள் கால்களில் விழுந்து கெஞ்சுகிறேன்'' என்பான். அவனது உருக்கமான வசனங்களைக் கேட்பவர்களும் அழுதுகொண்டே அவனை அணைத்துக்கொண்டு அன்புடன் ஆசீர்வாதம் செய்வார்கள். சாஸ்திரங்கள், ஒரு பாபி தனது பாவங்களுக்காக பச்சாதாபப்படும் போது பாபத்தில் கால் பங்கு குறைந்துவிடும் என்றும், தனது பாவங்களை மக்களின் முன்பு உரக்கக் கூறும்போது மேலும் பாதி பங்கு குறைந்துவிடும் என்றும், அவனது பாவங்களைப் பற்றி யார் பேசி சந்தோஷிக்கிறார்களோ அவர்களிடம் கால்பங்கு சென்று அடையும் என்றும் கூறுகின்றன.

மதாயி தனது தீனமான ஸ்வபவாத்தாலும் மஹான்களின் கிருபையாலும் மஹாபக்தனாகிவிட்டான். மதாயியின் பகவத்பக்தியின் கீர்த்தி பரவலாயிற்று. ஜனங்கள் அவனது பழைய பாவங்களை மறந்து அவனது பெயரைக்கூட மறந்து அவனை ''ப்ரம்மச்சாரி'' என்ற பெயரால் அழைக்கலானார்கள். நவத்வீபத்தில் இன்றும் ''மதாயிகாட்'' அவனது புகழைப் பரப்பிக்கொண்டு இருக்கிறது. எப்படிப்பட்ட துராசாரமுள்ளவனும் என்னை அனன்யமாக பஜித்தால் அவனை சர்வச்ரேஷ்ட ஸாதுவாக எண்ண வேண்டும் என்று கீதையில் கிருஷ்ண பகவான் சொன்னது மதாயி விஷயத்தில் சத்யமாகிவிட்டது.

''अपि चेत्सुदुराचारो भजते मामनन्यभाक्
साधुरेव समन्तव्यः सम्यग्व्यवसितो हि सः (गीता 9 /30)

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

## அறிவிப்பு

''மதுரமுரளி'' மாத இதழுக்கு சந்தாதாரராக விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

''மதுரமுரளி'', ப்ரேமிகபவனம், New No. 2, Old. 24, நேதாஜி நகர், ஜாபர்கான் பேட்டை, சென்னை - 83.

சந்தா விவரம் : ஆண்டு சந்தா ரூ. 60/-, ஆயுள் சந்தா ரூ. 750/-

# ஸனாதனப் புதிர் - பகுதி - 20

தொகுப்பு : **''ஆத்ரேயன்'',** சென்னை.

1. வஸுதேவருக்கு பல மனைவிகள் இருந்தனர். அவர்களில் முக்கியமான ஏழு மனைவிகளின் பெயர் என்ன?
2. வஸுதேவருக்கு தேவகி மூலம் பிறந்தது - எட்டு பிள்ளைகள், ஒரு பெண். இவர்களது பெயர் என்ன?
3. க்ருஷ்ணர் – ருக்மிணியின் புதல்வியான சாருமதியை யார் மணந்தார்?
4. பாகவதத்தில் உள்ளபடி தசரதரின் பெண்ணின் பெயர் என்ன? இந்தப் பெண்ணின் கணவர் பெயர் என்ன?
5. ஸூர்ய நமஸ்காரப் ப்ரச்னத்தில் எத்தனை அனுவாகங்கள் உள்ளன? மொத்தம் எத்தனை பஞ்சாசத் உள்ளன? எத்தனை நமஸ்காரங்கள் செய்ய வேண்டும். அசக்தர்கள் குறைந்தபட்சம் எவ்வளவு நமஸ்காரம் செய்ய வேண்டும்?
6. ஸ்வாமி சிவானந்தர் பிறந்த ஆண்டு, அவர் மஹாசமாதி அடைந்த ஆண்டு (தேதி, மாதம், ஆண்டு) இவைகள் என்ன? இவர் எந்த வருடம் சிவானந்தா ஆசிரமத்தை ரிஷிகேசத்தில் ஆரம்பித்தார்?
7. தாடகையின் அப்பாவின் பெயர் என்ன? தாடகையின் கணவரின் பெயர், பிள்ளையின் பெயர் என்ன? யாருடைய சாபத்தால் அரக்கியானாள்?
8. தைத்ரீக ஆரண்யக முதல் ப்ரச்னம் என்று எதைக் கூறுகிறார்கள்?
9. மாரீசன், மேலும் சுபாஹு இவர்கள் மேல் இராமன் தொடுத்த பாணங்கள் பெயர் என்ன?
10. துஷ்ட ஸ்த்ரீகள் சிலர் வதை செய்யப்பட்டு இருக்கிறார்கள். அந்தப் பெண்களின் பெயர் என்ன? அவர்களைக் கொன்றவர்கள் யார்? (மூன்று பெண்களைக் குறிப்பிடவும்).
11. வால்மீகி ராமாயணத்தில் அங்கதேசத்து அரசனான ரோமபாதரின் பெண்ணின் பெயர் என்ன? மாப்பிள்ளையின் பெயர் என்ன?

ஸனாதனப்புதிர் பகுதி 20-க்கான பதில்களை
டிசம்பர் 26க்குள் அனுப்ப வேண்டும்.

## ஸனாதனப்புதிர் - பகுதி - 19 - விடைகள்

1. அஹல்யை
2. இல்வலன், வாதாபி
3. அனாக்ருஷ்டி கலிங்க தேசத்து ராஜகுமாரியை மணந்தார். பாண்டவர்களுக்காக சண்டை போட்டார்.
4. அசோகன் (விசோகன் என்ற பெயரும் உண்டு)
5. சாவித்ரி, மால்வி
6. ஆத்ரேயி
7. பகர் என்ற ரிஷி, நெடு நீண்ட ஆயுளால் வரும் கஷ்டங்களையும், சிரமங்களையும் எடுத்து உரைத்தார். (3-வது பர்வம் - 193 அத்தியாயம்)
8. கோமுகன், குணகேசி
9. ஹோமதேனு என்ற முனிவர். அவரது கன்றுக்குட்டியை கர்ணன் கொன்றுவிட்டதால்.
10. அஸ்வத்தாமா, கொன்றது பீமன், புத்திரசோகம் தாங்காமல் துரோணாசாரியார் ஆயுதங்களை எறிந்து ப்ராணத்தியாகம் செய்வதற்காக.

---

ஸனாதனப் புதிர் - பகுதி - 19க்கான சரியான
பதில்களை அனுப்பி பரிசு பெற்றவர்கள் விவரம்

**முதல் பரிசு ரூ.** 250/-

C. Krishnaswami, 23 (32), Jambulinga Naicka Street, Chennai - 34.

**இரண்டாம் பரிசு ரூ.** 150/-

Vidyaranyan, C/o. Madhuramurali Bhavan, Plot No. 590, II Main Road, Ashtalakshmi Nagar, Alappakkam, Chennai - 116.

**மூன்றாம் பரிசு ரூ.** 100/- **(தலா ரூ.** 50/-**)**

1. S. Saranathan, 10/21, Ranganathan Street, Nehru Nagar, Chrompet, Chennai - 600 044.
2. K.S. Subramanyan, 16/4, Dr. Ranga Road, Mylapore, Chennai - 600 004.

# பாலகர்களுக்கு ஒரு கதை - 60

பூரி க்ஷேத்திரத்திற்கு அருகில் வித்யாநகர் என்ற ஒரு ஊர் உள்ளது. அங்கு கல்யாணப்ரம்மசாரி என்ற ஒரு இளைஞன் வாழ்ந்து வந்தான். அவன் ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவிடம் ஏகாந்த பக்தியுடையவன். ஏழ்மையில் வாடினாலும், அவன் எப்பொழுதும் க்ருஷ்ணனையும், அவனது லீலைகளையும் தியானித்துக்கொண்டு சந்தோஷமாகயிருந்தான்.

அதே ஊரில் ஒரு வயதான பெரியவரும் வாழ்ந்து வந்தார். அவருக்கு பல குழந்தைகள் இருந்தனர். அவரது குடும்பம் ஒரு செல்வச்செழிப்பு மிக்க குடும்பம். செல்வந்தரான அந்த பெரியவர் ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மா அவதரித்து பல லீலைகள் புரிந்த ப்ருந்தாவனத்தின் பெருமையை அறிந்து, தம் வாழ்நாளில் ஒருமுறையேனும் அங்கு சென்று தரிசிக்கவேண்டுமென்று ஆவல் கொண்டார். தனது மகன்களிடம் தனது ஆவலை வெளிப்படுத்தி, தன்னை ப்ருந்தாவன யாத்திரை அழைத்துச்செல்லும்படி வேண்டினார். அந்தக் காலத்தில் இப்போதுள்ள நவீன வசதிகளெல்லாம் கிடையாது. ப்ருந்தாவனம் செல்லவேண்டுமென்றால் பாத யாத்திரையாகத்தான் செல்ல முடியும். யாத்திரை பூர்த்தியாக பல மாதங்கள் ஆகிவிடும்.

அந்த பெரியவரின் மகன்கள், ''நாங்களெல்லாம் இளைஞர்கள். எங்களுக்கு பல அலுவல்கள் இருக்கின்றன. நாங்கள் இப்பொழுது ப்ருந்தாவன யாத்திரைக்கெல்லாம் வரமுடியாது. நீங்கள் வேண்டுமானால் வேறு யாரையாவது துணையாகக் கொண்டு யாத்திரை சென்று வாருங்கள்!'' என்று கூறிவிட்டனர். என்ன செய்வதென்று யோசித்த அந்த பெரியவருக்கு கல்யாண ப்ரம்மசாரியின் ஞாபகம் வந்தது. அவனை அழைத்து அவனிடம், ''எனக்கு ப்ருந்தாவனம் செல்லவேண்டுமென்று மிகவும் ஆசையாக உள்ளது. நீயோ ஏழ்மையில் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறாய். நீ என்னுடன் துணையாக வருவாயானால் உனது உணவு மற்றும் செலவுகளை நானே கவனித்துக்கொள்வேன்'' என்றார். கல்யாண ப்ரம்மசாரிக்கு சந்தோஷம் தாளவில்லை.

தனது இஷ்டதெய்வமான கண்ணபிரானின் அவதார பூமியான ப்ருந்தாவனத்திற்குச் செல்ல இப்படி ஒரு வாய்ப்புக் கிடைக்கும் என்று அவன் கனவிலும் நினைக்கவில்லை. பகவானின் கருணையை எண்ணி எண்ணி மகிழ்ந்தான்.

இருவருமாகக் கிளம்பி, பாதயாத்திரையாக பல மாதங்கள் சென்று ப்ருந்தாவனத்தை அடைந்தனர். அங்கு க்ருஷ்ண பரமாத்மா அவதரித்து லீலைகள் புரிந்த அனைத்து தலங்களையும் தரிசித்து பரவசமடைந்தனர். தங்களது பிறவிப்பயனை அடைந்துவிட்டதை உணர்ந்து மகிழ்ந்தனர். ப்ருந்தாவனத்தில் திடீரென்று அந்தப் பெரியவர் நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையாகிவிட்டார். நோய்வாய்ப்பட்ட தந்தையை ஒரு மகன் கவனித்துக்கொள்வதைக் காட்டிலும், மிகுந்த அக்கறையுடன் கல்யாணப்ரம்மசாரி அவரைப் பார்த்துக்கொண்டான். மெல்ல மெல்ல அவரது உடல்நிலை தேறியது. தனக்கு அந்த இளைஞன் செய்த ஒப்பற்ற சேவைக்கு ஏதேனும் கைம்மாறு செய்தே தீர வேண்டும் என்று பெரியவர் துடித்தார். அவனிடம், ''உனக்கு நான் என்ன கைம்மாறு செய்துவிட முடியும்! எனது பெண்ணையே உனக்கு மணம் முடித்து வைக்கிறேன்'' என்றார். அதற்கு அவன், ''நான் அப்படியொன்றும் அரிய சேவை செய்துவிடவில்லை. மனிதாபிமானம் உள்ள எவரும் செய்வதைத்தான் நானும் செய்தேன். இதன் பொருட்டு நான் உங்களிடமிருந்து எவ்வித கைம்மாறும் எதிர்பார்க்கவில்லை'' என்றான். ஆனால் விடாப்பிடியாக பெரியவர், ''இந்த ப்ருந்தாவனத்தில் வாஸம் செய்யும் க்ருஷ்ணனை ஸாக்ஷியாக வைத்துச் சொல்கிறேன் - ஊர் திரும்பியதும் உனக்கு என் பெண்ணைத் திருமணம் செய்து கொடுப்பேன்'' என்று ப்ரதிக்ஞை செய்தார்.

ஊருக்குத் திரும்பியதும், பெரியவர் தனது யாத்திரை, தான் நோய்வாய்பட்டபோது கல்யாணப்ரம்மசாரி தன்னை கவனித்துக் கொண்டது, தான் அவனுக்கு அளித்த வாக்குறுதி ஆகியவற்றைப் பற்றி தனது குடும்பத்தாரிடம் விரிவாக கூறினார். ஆனால் அவர்களோ ''அவன் செய்த சேவைக்காக அவனுக்கு வேண்டுமானால் நிறைய பணம் கொடுக்கலாம். ஆனால் நம் வீட்டுப் பெண்ணைத் திருமணம் செய்துகொடுப்பதெல்லாம் நடக்காது. அப்படிச் செய்தால் அது நமது குடும்ப கௌரவத்தை பாதிக்குமல்லவா?'' என்று ஒரே குரலில் மறுத்துவிட, பெரியவரும் அவர்களது எதிர்ப்பைக் கண்டு பயந்து மேலே ஒன்றும் பேசவில்லை.

நிலைமையை அறிந்த கல்யாணப்ரம்மசாரி ஊராரிடம் பெரியவர் செய்த ப்ரதிக்ஞையைப் பற்றிக் கூறினான். ''எனக்கு அவரது பெண்ணை மணந்து கொள்ள வேண்டும் என்ற ஆசையினால் நான் இவ்வாறு கூறவில்லை. அவர் ப்ருந்தாவனத்தில் ஸ்ரீக்ருஷ்ணனை ஸாக்ஷியாக வைத்து வாக்குக் கொடுத்துள்ளார். இப்பொழுது வாக்களித்தபடி செய்யாவிட்டால் அவருக்கு மிகப்பெரிய பாபம் வந்து சேரும். அவரது சத்யசங்கல்பத்தைக் காப்பாற்றவே நான் இவ்வாறு கூறுகிறேன்'' என்று கூறினான். அவன் கூறியதைக் கேட்ட ஊரார், ''நீ அவர் க்ருஷ்ணனை ஸாக்ஷியாக வைத்து வாக்குறுதி அளித்தார் என்று சொல்கிறாயே, அந்த க்ருஷ்ணனை பஞ்சாயத்திற்கு ஸாக்ஷி சொல்ல அழைத்துவர முடியுமா?'' என்று கேட்டனர்.

அதற்கு ஒப்புக்கொண்ட கல்யாணப்ரம்மசாரி மீண்டும் ப்ருந்தாவனத்திற்கு யாத்திரையாகச் சென்றான். அங்கு சென்று பகவான் ஸ்ரீக்ருஷ்ணனிடம் உள்ளம் உருகி தன்னுடன் ஸாக்ஷி சொல்ல வரும்படி வேண்டினான். பின்னர் தன் ஊருக்குக் கிளம்பினான். ஊருக்குத் திரும்பும்போது பகவான் தன்னைப் பின்தொடர்ந்து வருவதை அவரது குழலோசை, காலில் அணிந்த சலங்கையின் ஸப்தம் ஆகியவற்றால் உணர்ந்தான். ஊரை அடைந்தவுடன் அவனைப் பின்தொடர்ந்து வந்த குழலோசையும், சலங்கை சப்தமும் நின்றுவிட்டன. அவன் ஊர் பெரியவர்களிடம் பகவான் பஞ்சாயத்தில் ஸாக்ஷி சொல்ல வந்திருப்பதாக அறிவித்தான். பஞ்சாயத்தும் கூடியது.

கல்யாணப்ரம்மசாரி பஞ்சாயத்திற்கு வந்தபொழுது மீண்டும் அவனைத் தொடர்ந்து குழலோசையும், சலங்கை சப்தமும் கேட்டது. பஞ்சாயத்தில் பெரியவர்கள் ''ஸாக்ஷி சொல்ல வந்த பகவான் எங்கே?'' என்று கேட்ட மறுகணமே அந்த இடத்தில் ஒரு அழகான பகவான் க்ருஷ்ணரின் அர்ச்சாவதார ரூபம் தோன்றியது. இதைப் பார்த்து ஊரே அதிசயித்தது. இந்த அதிசயத்தை கண்ட பெரியவரின் குடும்பத்தினரும் கல்யாண ப்ரம்மசாரிக்கே தங்கள் வீட்டுப் பெண்ணை மணம் செய்து வைக்க சம்மதித்தனர்.

இந்த சம்பவம் நடந்த அதே இடத்தில் ஸ்ரீக்ருஷ்ணனுக்கு 'ஸாக்ஷி கோபாலன்' என்ற திருநாமத்துடன் ஒரு அழகிய கோயில் அமைந்துள்ளதை இன்றும் காணலாம்.

# மாலே மணிவண்ணா - 2

**– மகாவித்துவான் மயிலம் திரு. வே. சிவசுப்பிரமணியன்**

''எம்பெருமானே! உன்னோடு போர் செய்வோம் என்று செருக்கினால் அகங்கரித்து வந்து போர் செய்தவர்கள் பலர். அவர்களது அகங்காரத்தை அழித்து வென்றவன் நீ! போரில் உன்னை வெல்லக்கூடியவர்கள் இல்லை என்று உயர்ந்து நிற்கின்ற பேராற்றல் உடையவன் நீ.

குற்றம் அற்ற குணங்களின் இருப்பிடமானவன் நீ! எல்லாவற்றுக்கும் எல்லார்க்கும் தலைமையாகும் தன்மையால் அண்ணல் என்று அழைக்கப்படுகிறாய்! பிரமன், மன்மதன் என்ற இருவருக்கும் தந்தையாக உள்ளாய்! பரம்பொருளாக உள்ள உன் சரித்திரங்களைத் தெளிவாக அறிந்து கூறுதல் என்பது மயக்கமற்ற தெளிந்த ஞான செல்வர்களுக்கும் மிகவும் அரிய செயல். அத்தகைய உயர்ந்த நலங்களை உடைய உன்னை இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன், இவன் என்று எடுத்துச் சொல்வது அடியோமாகிய எங்களுக்கு எளிதாகுமா?

சொல்ல முடியாத பொருளாக நீ இருந்தாலும் அப்படி இருக்கிறாய் என்பது எங்களுக்குத் தெரிந்தாலும் எங்களால் உன்னைப் பேசாமல், புகழாமல் இருக்க முடியவில்லை.

திருமகளாய மறுவை அணிந்த மார்பை உடையவனே! உன்னிடத்தில் எங்களுக்குள்ள அன்பு அதிகம். அந்த விருப்பம்தான் சொல்லுதற்குரிய ஆற்றல் இல்லாத இவர்கள் என்று தெரிந்தும் எங்களைச் சொல்லத் தூண்டுகிறது. நாங்கள் உன்னைப் பற்றிச் சொல்கிற சொற்கள் பொருளில்லாதவையாக உள்ளவை. ஆனாலும் வெறுக்காமல் நீ அருள் புரிதல் வேண்டும்'' என்று ஒரு அழகான அவையடக்கத்தோடு கூடிய முகவுரை ஒன்றைப் பெருமானிடத்தில் விண்ணப்பித்துவிட்டுப் பெருமானைப் புகழத் தொடங்குகிறார்.

வெற்றி பெற்ற பெரும் புகழ் உடைய அந்தணர்களால் காப்பாற்றப்படுகின்ற அறமாக இருக்கின்றவனும் நீயே.

அன்புடையவர்களுக்குச் செய்யப்படும் கருணையாக இருக்கின்றவனும் நீயே.

உன்னை வழிபடும் திறனில்லாதவர்கள், வாழ்க்கையை வாழ்வாங்கு வாழும் திறம் இல்லாத கொடியவர்களைத் திருத்திப் பணிகொள்வதற்குரிய தீமை நீங்கிய சிறப்பினை உடைய மறக்கருணையும், தீயவர்களுக்குத் தீமை ஒழியச் செய்யும் வருத்தமும் நீயே.

இடமகன்ற ஆகாயத்தின் கண்ணே நின்று அழகிய நிலவொளியை உலகத்துக்குத் தருகின்ற குளிர்ச்சியான சந்திரனும், அதற்கு நேர்மாறான வெப்பத்தைத் தருகிற சூரியனும் நீயே. ஈசானம், தற்புருடம், வாமம், அகோரம், சத்தியோஜாதம் என்ற ஐந்து முகங்களை உடைய சிவனும், அவனால் உண்டான உலக உயிர்களின் ஒடுக்கமாகிய சங்காரமும் நீயே!

எல்லா உலகிற்கும் எல்லா உயிர்களுக்கும் எல்லா நலங்களையும் அருளுகின்ற குற்றம் நீங்கிய அறிவிற்கு ஆதாரமாக உள்ள வேதமாக இருப்பவனும் நீயே! தாமரை மலரில் வீற்றிருக்கின்ற பிரமனும் அவனால் செய்யப்பெறும் படைப்புத் தொழிலும் நீயே! உலகிற்கு வல்லமையை மிகுவிக்கின்ற நீரைத் தருகின்ற மேகமாக நீ இருக்கிறாய். பூமிக்கும் சுவர்க்கத்திற்கும் இடைவெளியாக உள்ள ஆகாயமாகவும் நீயே இருக்கிறாய். பூமியாகவும் சுவர்க்கமாகவும் இருப்பவனும் நீயே. என்றும் குன்றாத பொலிவுடன் இருக்கின்ற இமயமலையாக இருக்கிறவனும் நீயே.

இவ்வாறு, காத்தல், அழித்தல், படைத்தல் என்னும் முத்தொழிலாகவும், முத்தொழில் காரணமாக உள்ள கடவுளாகவும் நீயே இருக்கின்றபடியால் உன்னை இவர்களைப் போன்றவன், இன்ன தன்மையை உடையவன் என்று உவமை சொல்வதற்குரிய பிறரை எங்களால் அறிய முடியவில்லை. தன் ஒப்பார் இல்லப்பன் என்ற பொருளில் 'ஒப்பிலியப்பன்' என்றே உன்னை வழங்க எங்களுக்குத் தோன்றுகிறது. ஆயினும் எதையும் ஒரு உவமை மூலம் விளக்குவது எங்கள் மனித இயல்பு. ஆதலின் அதற்கேற்ப உனக்கு ஓர் உவமை சொல்லிப் பார்க்க ஆசைப்படுகிறோம்.

பொன்னாற் செய்யப்பெற்ற அழகிய சக்கரப்படையை வலக்கரத்தே ஏந்திக்கொண்டு உலக உயிர்களுக்கு ஆதிமூல மூர்த்தியாக நீ இருக்கின்றபடியால் உன்னுடைய புகழொடும் கூடி உன்னைப் போலவே நீ இருக்கிறாய் என்று உன்னையே உனக்கு உவமையாகச் சொல்லி வாழ்த்துகிறோம். உன்னைப் போன்ற புகழை உடையாய்! பீதாம்பரம் என்னும் பொன்னாடையை அணிந்திருப்பாய்! கருடக்கொடியை உடையாய்! அழகிய பாஞ்சசன்யம் என்னும் சங்கினை இடக்கரத்தே ஏந்தியுள்ளாய்! இகழ்வாரைச் சென்று கொன்று வெற்றி கொண்ட பேராற்றல் பொருந்திய சக்கரப் படையை வலக்கரத்தே ஏந்தியுள்ளாய்! நீலமணி போன்ற திருமேனியை உடையாய்! அழகிய மார்பினை உடையாய்!

கணக்கில்லாத புகழை உடையாய்! வாய்மொழி எனப்படும் வேதத்தை உலகில் அறம் நிலைநிறுத்த விளங்கும்படி தோற்றுவித்ததனால் 'வாய்மொழிப் புலவ! என்று அழைக்கப்படுகிற பெருமானே!' நாங்கள் இன்பம் நிறைந்த மனம் உடையவர்களாய் இவ்வுலகத்தே எம் உறவினர்களோடு சேர்ந்து உன் திருவடிக்கீழ் இன்றுபோல் என்றும் தங்கி வளமான வாழ்க்கையைப் பெற உனது திருவடி நிழலை வணங்கித் துதிக்கிறோம்.

பகவத்கீதையில் எம்பெருமான் எல்லாமாகவும் எல்லா வற்றுக்கும் அப்பாற்பட்டும் இருக்கிற தத்துவம் விளக்கப்படுகிறது. அந்த அத்வைத தத்துவம் இந்தப் பரிபாடலிலும் சொல்லப்பட்டு உள்ளது. இறைவன் நம்மோடு உடனிருந்து நம்மை இயக்குகிறான். இதுவே 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்று சொல்லப் பெறுகிறது. அறமும் மறமும் அவனுடையன என்பதை வேறொரு வகையில் 'பாவம்நீ, தருமம் நீ; பகையும் நீ; உறவும் நீ' என்று கூறுவதையும் பார்க்கலாம். சூரியன் முன்னிலையில் ரவை காய்கிறது. ரவையில் உள்ள புழுக்கள் இறக்கின்றன; சூரியன் முன்னிலையில் முதியவன் ஒருவன் குளிர்காய்கிறான். சூரியன் சாக்ஷியாக புழுக்களுக்கு வதமும், முதியவன் உடம்புக்கு இதமும் உண்டாகிறது. வதம், இதம் இரண்டும் சூரியன் முன்னிலையில் இருந்தாலும் இந்தப் பயன்கள் புழுவையும், முதியவனையும் சாருமேயன்றி சூரியனைச் சாராது. அதுபோலவே இறைவன் நம்மோடு உடனிருந்து எல்லாச் செயல்களையும் நாம் செய்தாலும்

அவற்றில் உண்டான நன்மையும் தீமையும் நம்மையே சாருகின்றன. நாம் செய்கின்ற செயல்களுக்குத் தகுந்த பயனை நமக்கு அளிக்கிற பெருமான் நம்மிடத்திலேயே மறைந்து நிற்கிறான். நாம் அவனைப் புரிந்து கொண்டு அணுகுகிறபோது அவன் வெளிப்பட்டு அருள் செய்கிறான். உயிர்களாகிய நாம் மருள் உடையராயபோதும், அருள் உடையராயபோதும் அவன் இல்லாமல் இருப்பது இல்லை. இந்தக் கருத்தை அடியொற்றியே விஷ்ணு சஹஸ்ரநாமத்தில் 66-வது திருமந்திரமாக 'ப்ராண:' - உயிராயிருப்பவர் என்ற மந்திரம் வருகிறது. உலகில் ஜீவனாக ஆத்மா நுழைந்த பிறகே விராட் வடிவம், செயல்புரியத் தொடங்கியது. 'பூதாத்மா' - எல்லாவற்றிற்கும் ஆத்மாவாக இருப்பவர். எல்லாவற்றிலும் உள்ளும் புறமும் நீக்கமற நிறைந்திருப்பவர் என்ற எட்டாவது நாமக் கருத்தையும் காண்க.

பரமாத்மாவே பிராணன். அவர் க்ஷேத்ரஜ்ஞனாக, ஜீவனாக உட்புகுந்த பிறகே அசைவு ஏற்பட்டபடியால் க்ஷேத்ரஜ்ஞனான ஜீவனே ப்ராணன். அவரே உயிருக்கும் உயிர். அவரால் உயிர்ப்பிக்கப்பெற்ற உயிரும், பிராணவாயுவும், உயிர்ப்பின் அடையாளங்களும், உயிர்ப்பும், அதனைத்தரும் உயிரும், உயிராகி உலகை வாழ வைப்பவரும் அவரே.

320, 407 திருநாமங்களாகிய, ப்ராண: ப்ரண: 408-வது திருநாமத்தால் 'ப்ராணத'. உயிரைத் தருபவர் என்பனவற்றையும் இந்த இடத்தில் ஒப்பு நோக்குக.

*''ஒன்றிரண்டு மூர்த்தியாய் உறக்கமோடு உணர்ச்சியாய்*
*ஒன்றிரண்டு காலமாகி வேலை ஞாலம் ஆயினாய்*
*ஒன்றிரண்டு தீயும் ஆகி ஆயன் ஆய மாயனே*
*ஒன்றிரண்டு கண்ணினானும் உன்னை ஏத்த வல்லனே''*

என்பது முதலாக வரும் திருமழிசைப்பிரான் திருச்சந்த விருத்தம் (7 - 12) பாடல்கள், இப்பரிபாடற் பகுதியோடு ஒப்புக் நோக்கிப் பார்த்து அனுபவிக்கத் தகுந்தவை.

(தொடரும்)

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 11

கிட்டத்தட்ட நூறு வருஷங்களுக்கு முன் நடந்த விஷயம் பற்றி பார்ப்போமா? அப்பொழுது பாரத தேசத்தில் ஆங்கிலேயர்களின் ஆட்சி நடந்துகொண்டிருந்த ஸமயம். மதுரா ஜில்லாவின் கலெக்டர் ஒரு ஆங்கிலேயன். மிகவும் கண்டிப்பும், கோபமும் நிறைந்த துர்குணமுள்ளவன். அனைவரும் அவனைக் கண்டு நடுங்கினர். வ்ரஜத்திலுள்ள வனங்களில் அடிக்கடி வேட்டையாடச் செல்வான். ஒரு சமயம், வேட்டையாடும் எண்ணத்துடன் நந்தகாவ்வுக்கு சற்றுதள்ளி உள்ள உத்தவ்க்யாரி என்னும் இடத்தில் கூடாரம் அமைத்துக்கொண்டான். ஒரு மானை வேட்டையாட குறிவைத்த ஸமயம் அவனைப் பின்னாலிருந்து நெடிதுயர்ந்த சிவந்த நிறமுடைய தேஜஸ்வியான ஒரு பாபா பிடித்து இழுத்து அவனிடமிருந்த துப்பாக்கியைப் பறித்துக்கொண்டு தயவுசெய்து ஸ்ரீக்ருஷ்ணனின் இந்த பவித்ர பூமியில் இப்படிப்பட்ட காரியத்தை செய்யாதீர்கள் - Pray, do not do this in this holy land of Sri Krishna என்று கூறினார்.

அதே நேரத்தில் கலெக்டரின் சிப்பாய்கள் பாபாவை நோக்கி ஓடிவந்தனர். கலெக்டரும் கோபத்துடன் பாபாவை முறைத்தான். ஆனால், அவன் இந்த பாபா சாதாரணமான நபர் இல்லை என்று சீக்கிரம் புரிந்துகொண்டான். தன்னிடமிருந்து துப்பாக்கியைப் பறிக்கும் அளவுக்கு இவருக்கு துணிச்சல் இருக்குமானால் இவர் ஒரு மஹானாக இருக்க வேண்டும் என நினைத்தான். சிப்பாய்களுக்கோ கலெக்டருக்கோ பயப்படாமல் இருந்ததையும் அவர் துல்லியமாக ஆங்கிலத்தில் பேசியதையும் கண்டு சிறிது கோபம் தணிந்து கலெக்டர், பாபாவை நோக்கி - Who are you to prevent me? - நீ யார் என்னைத் தடுப்பதற்கு? என வினவினான்.

"I am your humble servant. It is my duty to advise that you should not kill animals here, unless you want to invite the wrath of Gods. Even the moghuls did not do any shooting in

these forests and issued orders preventing anybody else from doing so"— நான் உனது தாஸன். எனது கடமை உனக்கு நல்லுபதேசம் தந்து, நீ இங்கு வேட்டையாடி இறைவனின் கோபத்திற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வதுதான். முகலாயர்கள் கூட இங்கு வேட்டையாடவில்லை. மற்றவர்களையும் வேட்டையாட விடாமல் ஆணையும் இட்டனர் என்று பாபா கூறினார்.

பாபாவின் துணிச்சலையும் பணிவையும், தேஜஸுடன் கூடிய உருவத்தையும் கண்டு கலெக்டர் மிகவும் பாதிக்கப்பட்டான். அவரைத் தனது கூடாரத்திற்குள் வருமாறு அழைத்து அவருடன் அன்புடன் அளவளாவினான். கடைசியில் வ்ரஜத்தில் தான் இனி வேட்டையாடுவதில்லை என்று உறுதிமொழி தந்துவிட்டு எதிர்காலத்திலும் யாரும் வ்ரஜத்தில் வேட்டையாடக்கூடாது என்று ஆணை பிறப்பித்து பாபாவை ஆனந்தப்படுத்தினான்.

கலெக்டரின் துப்பாக்கியைப் பறித்துப் பிடித்த இந்த பாபா பூர்வாச்ரமத்தில் காச்மீரத்தில் டெபுடி மாஜிஸ்ட்ரேட்டாக இருந்தவர். ஒரு சமயம், அவரது நியாயாலயத்தில் வந்த ஒரு வழக்கில் அவரது மருமகனுக்கே அவர் தண்டனை அளிக்கும் நிலை ஏற்பட்டது. அவர் மருமகன் குற்றமற்றவன். ஆனால், சாட்சிகளின் பலத்தால் தோஷமற்றவனை குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டது. தனது களங்கமற்ற மருமகனுக்கு தண்டனை வழங்க முடியாமலும் சட்டத்திற்கு விரோதமாகவும் நடந்துகொள்ள முடியாத ஒரு தர்மசங்கடத்திலிருந்து தப்புவதற்காகத் தனது வேலையையே ராஜினாமா செய்துவிட்டு வ்ருந்தாவனம் வந்தடைந்தார்.

சிறுவயதிலிருதே பக்தி**பா**வனை நிரம்பப்பெற்ற அவருக்கு அடிக்கடி வ்ருந்தாவனத்தில் தான் பஜனை செய்வது போன்ற கனவு வருவதுண்டு. ப்ரபுவின் இச்சையால் அவரது வாழ்க்கையில் நடந்த சம்பவத்தால் அவரது கனவு நனவாயிற்று.

டெபுடி ஸாஹேப்புக்கு ராஸலீலையில் விருப்பம் அதிகம். ராஸ நாயகனான ஸ்ரீ க்ருஷ்ணனே ராஸமண்டபத்தின் டாகுர்ஜியாகத் திகழ்வதை அடிக்கடி த்யானம் செய்வார். அவருக்கு அதை

பரீக்ஷித்துப் பார்க்க ஆவல் ஏற்பட்டது. ஒரு நாள் வம்சீவடத்தில் ராஸலீலை பார்க்கச் சென்றபோது பையில் பேடாவை அள்ளிப்போட்டுக் கொண்டு, இன்று ராஸலீலையில் டாகுர்ஜியாக வருபவன் என்னிடம் பேடாவை கேட்டு வாங்கிக்கொண்டால் எனது நம்பிக்கை நிஜம்தான் என்று எண்ணிக்கொண்டார். ராஸலீலை முடிந்தவுடன் டாகுர்ஜி நேரே இவரிடம் வந்து கண்ணைச்சிமிட்டிக் கொண்டு, ''பையில் பேடாவை ஒளித்து வைத்திருக்கிறாயே! எனக்கு தரக்கூடாதா?'' என்று கேட்டு பையைப் பறித்துக்கொண்டதும் இவருக்கு ஸ்ரீக்ருஷ்ணனிடம் த்ருடவிச்வாசம் ஏற்பட்டது.

வ்ருந்தாவனத்தில் பிக்ஷை எடுத்துக்கொண்டு க்ருஷ்ண சாக்ஷாத்காரத்திற்கு காத்திருப்பது என முடிவெடுத்தார். அவருக்கு வ்ருந்தாவனத்தில் எப்படி பஜனை செய்வது, எப்படி பிக்ஷை எடுப்பது என்பது பற்றி எல்லாம் தெரியாது. ப்ராஹ்மணராக இருந்ததால் பட்டுவஸ்த்ரம் மடி என்று நினைத்து ஒரு மஞ்சள் பட்டாடை அணிந்துகொண்டு பிக்ஷைக்குச் செல்வார்.

ஒருநாள், அவர் மாத்வ கௌடிய சம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ஸ்ரீ அவததாஸ்பாபாவின் ஆஶ்ரமத்தை அடைந்து பிக்ஷை கேட்டார். அவததாஸ்பாபா, தேஜஸுடன் விளங்கும் டெபுடி ஸாஹேப்பைக் கண்டு, ''அவருக்கு வைராக்யம் ஏற்பட்டுள்ளது; ஆனால் முறைப்படி உபதேசம் இல்லாமையால் சரியான வெளித்தோற்றத்தை ஏற்றுக்கொள்ளவில்லை'' என்றும் அவருக்கு சரியான பாதையைக் காட்ட வேண்டும் என்றும் புரிந்துகொண்டார். அவருக்கு பிக்ஷை அளிக்குமாறு உத்தரவிட்டுவிட்டு தனது கருணை நிறைந்த பார்வையை அவர் மீது செலுத்தி, ''குழந்தாய்! நீ இப்படிப்பட்ட வேஷத்துடன் பிக்ஷைக்கு வருவது அழகல்ல. நீ இன்னும் நிறைய விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். இங்கு மாலையில் ஸ்ரீமத்பாகவத புராணம் உபன்யாஸம் நடக்கும். அப்பொழுது வந்து தினமும் அதை ச்ரவணம் செய். உனக்கு மங்களம் உண்டாகும்'' என்றார்.

டெபுடி ஸாஹப்பும் தனது பட்டு வஸ்த்ரங்களை களைந்துவிட்டு மறுநாளிலிருந்து அவததாஸ்பாபாவின் பாகவத உபன்யாஸத்திற்குச்

செல்ல ஆரம்பித்தார். அவருடைய **பா**வ பூர்ணமான கதையைக் கேட்டு அவரது சரணங்களின் பூர்ணமாக ஆத்மசமர்ப்பணம் செய்தார். அவரிடமே விதிவத்தாக தீக்ஷை பெற்றுக்கொண்டு சன்யாச வஸ்த்ரமும் பெற்றுக்கொண்டார். அவருக்கு ப்ரேமதாஸ் என்ற தீக்ஷா நாமம் அளிக்கப்பட்டது.

குருதேவரின் ஆணைப்படி நந்தகாவ்வுக்கு அருகிலுள்ள லலிதாகுண்டத்திலுள்ள ஒரு ப்ராசீனமான கோவிலில் வசித்துக் கொண்டு பஜனை செய்ய ஆரம்பித்தார். காலை 3 மணியிலிருந்து மதியம் 3 மணிவரை நாமஜபமும் கீர்த்தனமும் செய்வார். நடு நடுவில் அவர் செய்யும் ஹுங்காரம் நந்தகாவ்வில் எதிரொலிக்கும். அதைக்கேட்டு மயில்களும் ப்ரதி த்வனி தரும். மதியம் 3 மணிக்கு கால்நடையாக நடந்து காட்டுவழியாக நாமஜபம் செய்துகொண்டே மாலை 7 மணி அளவில் வ்ருந்தாவனம் வந்து பிக்ஷை எடுத்து உணவருந்தி குருதேவருக்கு சரண ஸேவை செய்வார். உபாஸனை சம்பந்தமாக கேள்விகள் கேட்டு தெளிவுபெறுவார். இரவு அங்கேயே தங்கிவிட்டு காலை 3 மணிக்கு எழுந்து மறுபடி நாமஜபம் செய்து கொண்டே நடந்து நந்தகாவ் செல்வார். ஒரு சமயம் லலிதாகுண்டத்தில் ப்ரேதங்களின் உபத்ரவம் ஏற்பட்டது. குருதேவரிடம் இந்த ப்ரேதங்களை உத்தாரணம் செய்யுமாறு ப்ரேமதாஸ்பாபா ப்ரார்த்தித்துக் கொண்டார். குருதேவரும் லலிதாகுண்டத்தில் ஸ்ரீமத்பாகவத ஸப்தாஹம் நிகழ்த்தி ப்ரேதங்களை கரையேற்றி அப்படிப்பட்ட உபத்ரவம் எதிர்காலத்தில் இல்லாமல் செய்தார்.

இதற்குப் பிறகு குருதேவரின் ஆணைப்படி ப்ரேமதாஸ்பாபா நித்யம் சாயங்காலத்தில் ஸ்ரீமத் பாகவத ப்ரவசனம் செய்ய ஆரம்பித்தார். பாகவதத்தை சுந்தரமான அக்ஷரங்களில் லேகனம் செய்து வைத்தார். ஒரு சமயம், சிலர் அவர் எழுதிய பாகவதத்தைத் திருடிச் சென்றுவிட்டனர். இதனால், பெரிதும் துக்கமடைந்த ப்ரேமதாஸ்பாபா மூன்று நாட்கள் அன்னபானமின்றி படுத்தே கிடந்தார். நான்காவது நாள் திருடர்கள் தானாகவே பாகவதத்தை லலிதாகுண்டத்தில் எறிந்துவிட்டனர். பாகவதத்தின் பக்கங்கள் மிதந்து நீரின்மேல் வந்தன. இது பற்றி கேள்வியுற்று ப்ரேமதாஸ்

பாபா எல்லையில்லா ஆனந்தத்துடன் குண்டத்தை நோக்கி ஓடினார். மொத்த பாகவதமும் ஒரு எழுத்து கூட நாசமாகாமல் அவருக்குக் கிடைத்ததைக் கண்டு ஆனந்தக்கூத்தாடினார்.

கோ ஸம்ரக்ஷணத்தில் அவருக்கு தீவிர நிஷ்டை இருந்தது. அவரது குடிலுக்கு அருகில் நிறைய புஷ்டியான பசுக்கள் எப்போதும் இருக்கும். அவைகளை அவர் கொஞ்சி கொஞ்சி பார்த்துக் கொள்வார். அந்த பசுக்கள் கிராமத்திற்குள் சுதந்திரமாக மேயச் செல்லும். எந்த வயலில் மேய்ந்தாலும் யாரும் அவைகளைத் தடை செய்ய மாட்டார்கள். ப்ரேமதாஸ் பாபா பசுக்களை பெயர் சொல்லிச் சொல்லி அன்புடன் அழைத்தால் அவைகள் ப்ரேமையுடன் அவரை நோக்கி ஓடிவரும். பசுக்களின் க்ஷீரத்தை நந்தலாலாவின் ஸேவைக்கு அளித்துவிட்டு மீதமிருப்பதை ஸாதுக்களுக்கும் வைஷ்ணவர்களுக்கும் அளித்து மகிழ்வார். இப்படியாக நூறுவயது வரை வாழ்ந்து குருதேவரின் வாழ்க்கைக் காலத்திலேயே நாமஜபம் செய்து கொண்டே கோலோகம் அடைந்தார். லலிதாகுண்டத்தில் அவருடைய ஸமாதி இன்றும் உள்ளது.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

---

ஒரு ஸமயம், காஞ்சி பெரியவரிடம் ஒரு அன்பர் வந்தார். அவர் சமீபகாலமாக வெளிநாட்டில் தங்கியிருப்பவர். காஞ்சி பெரியவருக்கு வெளிநாட்டிற்குச் சென்று தங்குவதெல்லாம் பிடிக்காது என்பதால் மிகவும் தயக்கத்துடன் நின்றுகொண்டிருந்தார். பெரியவர் சந்தோஷப்படும் வகையில் ஏதாவது சொல்ல வேண்டுமென்று நினைத்து, ''நான் வெளிநாடு சென்றாலும் விடாமல் தாய், தகப்பனாருக்கு செய்யவேண்டிய சிரார்த்தங்களையெல்லாம் செய்து வருகிறேன்'' என்று கூறினார். உடனே பெரியவர் சிரித்துக் கொண்டு, ''நீ வெளிநாடு சென்று கெட்டுப்போனது மட்டுமன்றி, உன் தாய் தகப்பனாரையும் அங்கு அழைத்தாயாக்கும்!'' என்று கூற அவர் திகைத்து நின்றார்.

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 87

*திரும்பி யகந்தனை தினமகக் கண்காண்*
*டெரியுமென் றனையென் அருணாசலா*

'திரும்பி அகந்தனை' என்று பார்த்தால், எண்ணங்கள் எங்கு உற்பத்தி ஆகிறது என்று விசாரித்துக்கொண்டே சென்றோமானால் ப்ரஹ்மசாக்ஷாத்காரத்தை அடையலாம்.

இதையே 'திரும்பிய கந்தனை' என்று பிரிக்கலாம். பகவான் ரமணமஹரிஷிகளை ஒருவர் ஸ்வயம் அருணாசலேச்வரராக பார்க்கிறார். மற்றொருவர் சுப்ரமண்யஸ்வாமியாக பார்க்கிறார். இது அவரவர்களின் **பா**வத்தை பொறுத்தது. 'யத்**பா**வம் தத்**ப**வது' - ப்ரஹ்மஸ்வரூபமாக ரமண மஹரிஷிகளிருப்பதால், பக்தர்களுக்கு அவரவர்களின் விருப்பப்படி காட்சி கொடுக்கிறார். ஆனாலும், அவர் சுப்ரமண்யஸ்வாமியின் அவதாரமே என்பதற்கு பல சான்றுகள் உள்ளன என்பதை ஏற்கனவே ஒரு பாடலில் பார்த்தோம். (''சோம்பியாய் சும்மா சுகமுண்டு உறங்கிடிற் சொல்வேறென் கதி'')

பகவான் ரமண மஹரிஷிகள் ஜோதியில் தோன்றி, ஜோதியில் மறைந்து உள்ளார். பகவான் அவதாரம் செய்தபொழுது, ஒரு ஜோதி தரிசனம் அருகிலிருந்த ஒரு ஸ்த்ரீக்கு ஏற்பட்டதாக சரித்திரம் சொல்கிறது. ரமணமஹரிஷிகள், ஞானசம்பந்தர், குமரிலபட்டர் மூவரும் சுப்ரமண்யஸ்வாமியின் அம்சமாக அவதாரம் செய்தவர்கள். குமரிலபட்டர் கர்ம மார்க்கத்தை ப்ரகாசப்படுத்தினார். ஞானசம்பந்தர் பக்தி மார்க்கத்தை ப்ரகாசப்படுத்தினார். பகவான் ரமண மஹரிஷிகளோ வேதாந்த மார்க்கத்தை ப்ரகாசப்படுத்தி இருக்கிறார். ஆக, முருகனின் அவதாரங்களினால் கர்ம, பக்தி, ஞான மார்க்கங்கள் ப்ரகாசமாகி உள்ளன. சுப்ரமண்யஸ்வாமி வேதஸ்வரூபமாக உள்ளார். ஆதிசங்கரர், சுப்ரமண்யஸ்வாமி மேல் பாடியுள்ள சுப்ரமண்ய புஜங்கத்தில் ''மயூராதிரூடம் மஹாவாக்யகூடம்'' என்கிற பாடலில், 'மஹாவேத**பா**வம்' என்கிறார். 'திரும்பிய கந்தனை' - அப்படி திரும்பி வந்துள்ள சுப்ரமண்யஸ்வாமியை

தினமும் கண்ணால் தரிசனம் செய்து வந்தாலும் போதும், ஆத்ம தரிசனம் ஏற்படும் என்கிறார். சுப்ரமண்யஸ்வாமியான ரமண மஹரிஷிகளை தினமும் பார்த்து வந்தாலும் அவரையே தியானம் செய்து வந்தாலும், சுலபத்தில் ஆத்மசாக்ஷாத்காரம் ஏற்பட்டுவிடும்.

வேதாந்த கிரந்தங்களில் மோக்ஷத்தைப் பற்றி சொல்லும் பொழுது, கோவிலுக்குப் போகவேண்டாம், குருவிடம் செல்ல வேண்டாம், தியானம் பயில வேண்டாம், தீர்த்தயாத்திரை, க்ஷேத்ராடனம் செல்ல வேண்டாம், நாமஸங்கீர்த்தனம், பூஜை செய்ய வேண்டாம் என்று சொல்லி இருக்கும். அப்படிச் சொல்லிவிட்டு, ஆத்மவிசாரம் மட்டுமே பயிலச் சொல்லி இருக்கும். ஆத்மவிசாரத்தினால் ஒரு நிமிடம் கூட ப்ரஹ்மத்தில் இருந்து மனதை விலக்காதே என்று சொல்லி இருக்கும். இதை நன்கு கவனிக்க வேண்டும். ஸகுணோபாஸனை, நாமஸங்கீர்த்தனம், பூஜை யாருக்கு வேண்டாம் என்றால், தனது ஸ்வரூபத்திலேயே மனதை செலுத்தியவர்களுக்குத்தான். வேண்டாம் என்று சொன்னதை விட்டுவிட்டால் மட்டும் பிரயோஜனமில்லை. பின்னால் சொன்னதை செய்யவேண்டும். அநேகம் நபர்கள் முதலில் சொன்னதை (ஸகுணோபாஸனையை விடுவது) செய்துவிட்டு, பின்னால் சொன்னதை (ஆத்மவிசாரத்தினால் ப்ரும்மநிஷ்டையிலிருப்பது) பின்பற்ற முடியாமல் இருக்கின்றனர். அது தவறு.

இப்படி பலவிதமாய் ஸகுணோபாஸனை வேண்டாம் என்று சொல்லி, ஆத்மவிசாரத்தையே பயிலச் செல்லும் வேதாந்த கிரந்தங்கள் கூட, ஆச்சரியமாக கடைசியில், இவையனைத்தும் உன்னால் செய்ய இயலாவிடினும் பரவாயில்லை. ஜீவன்முக்தி அடைந்த ஒரு குருவை அடைந்து, அவரிடம் வினயமாக, பலவிதத்திலும் அவருக்கு கைங்கர்யம் செய்து வந்தால் போதும். ஆத்மதரிசனம் ஏற்பட்டுவிடும் என்று சொல்கின்றன. ஒரு ஜீவன்முக்தனிடம் சரணாகதி செய்தால், ஆத்மவிசாரத்தை கடைப்பிடித்து அடையும் நிலையை துல்யமாக அடையலாம்.

மஹாத்மாக்கள் எந்த ஒரு விஷயத்தையும் பேசும்பொழுது, தனது சொந்த அபிப்ராயமிது என்று சொல்லமாட்டார்கள். வேதம் இப்படி சொல்கிறது, சாஸ்திரம் இப்படிச் சொல்கிறது என்பர். வேதம்

என்ன சொல்கிறது என்றால், ''மஹாத்மாக்கள் இப்படிச் சொல்கின்றனர். மஹரிஷிகளின் அனுபவம் இது'' என்கிறது. கீதையில் பல விஷயங்களை பேசிய பகவான் க்ருஷ்ணபரமாத்மா கடைசியில், ''தத்வித்திஹி ப்ரணிபாதேன பரிப்ரஸன்னேன ஸேவயா'' - தத்வம் தெரிந்த ஞானிகளிடம் சென்று, ஞானத்தை தெரிந்துகொள் என்று சொல்கிறார். ஒரு ஜீவன்முக்தனிடம் பரிபூரணமாக சரணாகதி செய்து, அவரையே தியானம் செய்துகொண்டு, அவருக்கே பலவிதமாய் பூஜை செய்து வந்தாலே ஆத்மதரிசனம் ஏற்பட்டுவிடும். (தொடரும்)

## ஸ்ரீ துக்காராம் ஸ்வாமிகளின் அபங்கம்

*காஸியானே பூஜா கரு கேசீ ராஜாஹாசி ஸந்தேஹ மாஜா பேடீ ஆதா*
*உதகே ந்ஹான தரீ ஸ்வரூப தேதுஜே தேதே காய மாஜே வேசே தேவா*
*கந்தாசா ஸுகந்த புஷ்பாசா பரிமள தேதே மீ துர்பள காய கரு*
*பலதாதா தூஞ்ச தாம்போல அக்ஷதா தரீ காய ஆதா வாஹோா துஜ*
*வாஹு தக்ஷிணா ஜரீ தாது நாராயண ப்ரம்ம தேசி அன்ன துஜே காயீ*
*காதா தூ ஓங்கார டாளீ நாதேஷ்வர நாசாவயா தார நாஹீ கோடே*
*துகா ம்ஹணே மஜ அவகே துஜே நாம தூப தீப ராமக்ருஷ்ண ஹரி*

பாண்டுரங்கா! அனைத்துமாய் இருக்கும் உன்னை நான் எதைக் கொண்டு ஆராதிப்பேன். உனக்கு திருமஞ்சனம் செய்யலாம் என்றால் ஜலத்திலும் நீயே இருக்கிறாய். சந்தனம், புஷ்பம் போன்றவற்றால் உன்னை பூஜை செய்யலாம் என்றால், அவையெல்லாம் உனது படைப்பே அல்லவா! உனக்கு தாம்பூலம், அக்ஷதை போன்றவற்றை ஸமர்ப்பிக்கலாமென்றால், கல், மண், உலோகம் எல்லாவற்றிலும் நீயே நிறைந்திருக்கிறாய். அவ்வாறு இருக்க உனக்கு தக்ஷிணை என்று எதை அளிக்க முடியும்? அன்னம்தான் ப்ரஹ்மம். ஒளி, சப்தம் அனைத்தும் நீயே. நீ எங்கும் நீக்கமற நிறைந்திருப்பதால் நான் எந்த இடத்தில் நின்றுகொண்டு ஆடிப்பாடுவேன்! 'ராமக்ருஷ்ண ஹரி' என்று நாமஸங்கீர்த்தனம் செய்வதுதான் நான் உனக்கு செய்யும் தூப தீபாதி உபச்சாரமாகும்.

— துக்காராம் ஸ்வாமிகள்

# செய்திகள்

### நவம்பர் 4-ந் தேதி— ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தி மஹோத்ஸவம்

**ஆஸ்திரேலியாவில் சிட்னி நகரில்,** ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தி கொண்டாடப்பட்டது. அன்று அகண்ட நாமஸங்கீர்த்தனம் நடைபெற்றது.

**சென்னை, ஆலப்பாக்கம் மதுரமுரளிபவனத்தில்,** ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தியை முன்னிட்டு ஆயுஷ்ய ஹோமமும், ஆவஹந்தி ஹோமமும், ஸ்ரீ ஸ்வாமிகளின் பாதுகைக்கு திருமஞ்சனமும் நடைபெற்றது.

**பெங்களூர் மல்லேச்வரம்** ஸ்ரீசங்கரன் அவர்களின் இல்லத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தியன்று ஆயுஷ்யஹோமம், ஆவஹந்தி ஹோமம், கணபதி ஹோமம், நவக்ரஹ ஹோமம் மற்றும் சுதர்சன ஹோமம் நடைபெற்றன.

**கன்னியாகுமரி மாவட்டம் காணிமடம்,** யோகிராம் சுரத்குமார் மந்த்ராலயத்தில் அகண்ட நாம ஸங்கீர்த்தனமும், ஸ்ரீ யோகிராம்சுரத்குமார் அவர்களின் பாதுகைக்கு திருமஞ்சனமும் நடைபெற்றது.

**சேலம், பொன்னமாபேட்டை, ஸ்ரீ க்ருஷ்ணா ஆசிரமம்,** குருவாயூரப்பன் கோவிலில், ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தியை ஒட்டி ஸ்ரீ குருவாயூரப்பனுக்கு சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. பக்தர்களின் ''ஹரே ராம......'' நாமஸங்கீர்த்தனம் நடைபெற்றது.

### நவம்பர் 5-ந் தேதி

ஆவடி- பூந்தமல்லி மார்க்கத்தில் உள்ள ''கோவர்த்தன கிரி'' என்னும் சிற்றூரில் ஸ்ரீநிவாஸ நகர், பூங்கா தெருவில், ஸ்ரீ ஸ்வாமிகள் முன்னிலையில் (நூதன கோவர்த்தன குன்று நிர்மாணிக்கப்பட்டு) மஹாகோவர்த்தன பூஜை செய்யப்பட்டது.

### நவம்பர் 5-ந் தேதி முதல் 11-ந் தேதி வரை

சென்னை, கே.கே.நகரில் உள்ள ஸ்ரீ சங்கரன் அவர்களது இல்லத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் முன்னிலையில் கோபாஷ்டமியை ஒட்டி ஸ்ரீமத் பாகவத பாராயணமும் அஷ்டபதி பஜனையும், இரவில் நாம கீர்த்தனமும் நடைபெற்றன.

### நவம்பர் 12-ந் தேதி

வேலூர் அருகிலுள்ள ஆம்பூரைச் சேர்ந்த, பத்திரிக்கை நிருபர் ஸ்ரீ குமரேசன் மற்றும் ஸ்ரீ மோகன்குமார் அவர்களின் அழைப்பை ஏற்று ஸ்ரீ ஸ்வாமிகள், நவம்பர் 12-ஆம் தேதியன்று ஆம்பூருக்கு விஜயம் செய்தார்கள். மஹாத்மா காந்தியடிகள், ராஜாஜி போன்றோர் வருகை புரிந்து சிறப்பித்துள்ள ஆம்பூர் இந்து மேல்நிலைப் பள்ளியில் 6000 மாணவர்கள் முன்னிலையில் 'இந்து சமயம்' பற்றி ஸ்ரீ ஸ்வாமிகள் உபந்யாஸம் செய்தார்கள்.

இதைத் தொடர்ந்து, ஸ்ரீ ஸ்வாமிகள், அங்குள்ள ஆஞ்சநேயர் கோயிலுக்கு விஜயம் செய்து ஸ்ரீ ஹனுமானைப் பற்றி உபந்யாஸம் செய்தார்கள். இங்குள்ள ஆஞ்சநேயர், சனீஸ்வரனைத் தன் காலால் மிதித்தவாறு காட்சியளிக்கிறார். உபந்யாஸத்தைத் தொடர்ந்து, ஸ்ரீ ஸ்வாமிகள், வணிகர் சங்க உப-தலைவர் ஸ்ரீக்ருஷ்ணன் அவர்களது இல்லத்தில் ஓய்வெடுத்துக்கொண்டார்கள். பின்னர், ஆம்பூர் ஸ்ரீ நாகநாத ஸ்வாமி கோயிலில் ''சமயம்'' பற்றி உபந்யாஸம் செய்தார்கள். மக்கள் பெருந்திரளாக வந்து உபந்யாஸத்தைக் கேட்டு மகிழ்ந்தனர். ஸ்ரீஸ்வாமிகளை மீண்டும் ஆம்பூருக்கு வந்து 10 நாட்கள் உபந்யாஸம் செய்யுமாறு வேண்டிக் கொண்டனர்.

### நவம்பர் 16-ந் தேதி — துளசி கல்யாணம்

சென்னை ப்ரேமிகபவனத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் முன்னிலையில் துளஸீ கல்யாணம் நடைபெற்றது. நம் மஹிளா மண்டலியினரின் திவ்யநாம பஜனை நடைபெற்றது.

### நவம்பர் 17-ந் தேதி

சென்னை, ப்ரேமிகபவனத்தில் களட்டுப்பட்டு கிராமங்களில் இருந்து பக்தர்கள் வந்து ''ஹரே ராம.....'' திவ்ய நாமகீர்த்தனம் செய்தனர். ஸ்ரீ ஸ்வாமிகள், நாம மஹிமையைப் பற்றி உபந்யாஸம் செய்தார்கள்.

### நவம்பர் 20-ந் தேதி - விஷ்ணு தீபம்

சென்னை ப்ரேமிகபவனத்திலும், மஹாரண்யம் கல்யாண ஸ்ரீநிவாஸபெருமாள் திருக்கோவிலிலும் விஷ்ணுதீபம் ஏற்றப்பட்டது.

### மேட்டூரில் நாமஸங்கீர்த்தனம்

சேலம் மாவட்டம் மேட்டூரில் வசிக்கும் ஸ்ரீ பழனிமுத்து - பப்பி தம்பதியினர் ஸ்ரீ ஸ்வாமிகளிடம் மிகுந்த ஈடுபாடு உடையவர்கள். அவர்கள் வீட்டில் எப்பொழுதும் நம் ஸ்வாமிகளுக்குப் ப்ரியமான ''ஹரே ராம...'' நாமஸங்கீர்த்தனம் நடந்துகொண்டே இருக்கும். மேலும் சனிக்கிழமைதோறும் அகண்டநாமகீர்த்தனம் நடைபெற்று வருகிறது. அத்துடன் நில்லாமல், இவர்கள் மேட்டூர் எங்கும் மஹாமந்திரத்தை ஒலிக்கச் செய்ய வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் வீடுவீடாகச் சென்று நாம ப்ரச்சாரம் செய்து வருகின்றனர்.

### சங்ககிரியில் நாமஸங்கீர்த்தனம்

ஈரோடு அருகிலுள்ள சங்ககிரியில் வசிக்கும் ஸ்ரீ சுந்தரராஜன் - ஜோதி சுந்தரராஜன் தம்பதியினரின் இல்லத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும் ''ஹரே ராம...'' நாமஸங்கீர்த்தனம் நடந்து வருகிறது. சுமார் 40 அன்பர்கள் அவர்களுடன் சேர்ந்துகொண்டு நாமஸங்கீர்த்தனம் செய்துவருகினறனர். நம் ஸ்வாமிகளின் முக்கிய குறிக்கோளான ''ஹரே ராம...'' மஹாமந்திர ப்ரச்சாரத்தில் இவர்கள் மிகுந்த முனைப்புடன் ஈடுபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. சங்ககிரி முழுவதும் மஹாமந்திரம் ஒலிக்கவேண்டும் என்பதற்காக இவர்கள் தங்களை முழுமையாக அர்ப்பணித்து, நாமப்ரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

---

## நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

---

### டிசம்பர் 16-ந் தேதி முதல்— தனுர் மாத பூஜை ஆரம்பம்

சென்னை ப்ரேமிகபவனத்திலும் மஹாரண்யம் கல்யாண ஸ்ரீநிவாஸபெருமாள் திருக்கோயிலிலும் தனுர்மாத பூஜை ஆரம்பம். கல்யாண ஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயிலில் ஒரு நாள் பூஜை கட்டளையாக ரூ. 150/- செலுத்தி பக்தர்கள் தனுர்மாத பூஜையில் பங்கு கொள்ளலாம்.

மங்களானி பவந்து